பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: புரட்டாசி 18 (4—10—72) புதன் வெளியூர்: புரட்டாசி 19 (5—10—72) வியாழன் [இதழ்: 92

தமிழகத்தில் புதிய நகராட்சிகள்

சென்னை, அக். 4—
திருச்சி மாவட்டத்தில் உள்ள பொன்மலை பேரூராட்சி, இம்மாதம் 1-ந் தேதிமுதல் நகராட்சியாக மாற்றப்பட்டிருக்கிறது.

"பொன்மலை நகராட்சியில் 20 உறுப்பினர்கள் இருப்பார்கள்" என்று அரசிதழ் அறிவிப்பு கூறுகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள சீர்காழி ஊராட்சியும் நகராட்சியாக மாற்றப்பட்டிருக்கிறது; இதில் 20 உறுப்பினர்கள் இருப்பார்கள்.

இலங்கை அரசுக்கு அறைகூவல்

பதவியை உதறிவிட்டு மறு தேர்தலில் நிற்கிறார் செல்வநாயகம்

ஈழத் தமிழர்களின் உரிமையை நிலைநாட்டச் சூளுரை

கொழும்பு, அக். 4—
"1948-ல் சுதந்தரம் கிடைத்த பிறகு இலங்கைத் தமிழர் நிலைமை மோசமாகிக்கொண்டு வருகிறது -- சீரழியத் தொடங்கியிருக்கிறது!

"முதலில், ஏராளமான இந்தியக் குடிமரபு மலைத் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது; நாடாளுமன்றத்தில் 6 இடங்களைத் தமிழர்கள் இழந்தனர்; பிறகு தமிழின் நியாயமான தகுதியைப் பறிக்கும் அளவில், 'சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி எனும் சட்டம் இயற்றப்பட்டது; அந்தச் சட்டத்தின்படி, 'எல்லாம் சிங்களவருக்கே – எதுவும் இல்லை தமிழருக்கு' என்ற நிலை ஏற்பட்டது.

"பின்பு, புதிய அரசியல் அமைப்புச் சட்டம் வந்தது; பழைய அரசியல் அமைப்புச் சட்டம் தமிழருக்கு அளித்த பாதுகாப்புகளை அது நீக்கிவிட்டது!

"தமிழரின் மொழி – மத உரிமைகளைக் காக்க அரசியல் அமைப்புச் சட்டத்தில் 6 அம்சங்களைச் சேர்க்குமாறு கேட்டுக்கொண்டு தலைமையமைச்சருக்குக் கடிதம் எழுதினேன்; ஆனால் ஏதும் செய்யப்படவில்லை.

"ஆகவே, தமிழர் ஐக்கிய முன்னணியின் கொள்கைகளை ஆதரிக்கிறீர்களா இல்லையா என்பதைக் கூறுமாறு தமிழர்களைக் கேட்டுக் கொள்ளும் பொறுப்பு எனக்கு ஏற்பட்டிருக்கிறது; எனவே பதவியிலிருந்து விலகுகிறேன்; என்னுடைய தொகுதியில் மறு தேர்தல் நடத்துவதைத் தாமதித்து – அடிப்படைப் பிரச்சினையில் தங்கள் கருத்தைத் தெரிவிக்கத் தமிழ் மக்களுக்குள்ள வாய்ப்பை மறுக்கவேண்டாம் என அரசைக் கேட்டுக் கொள்கிறேன்"

என்று இலங்கைத் தமிழர் ஐக்கிய முன்னணியின் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவாகள், தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்தும் பேசுகையில் சுட்டிக் காட்டிக் குறிப்பிட்டார்.

"இலங்கையில் அடிமை இனமாக வாழ்வதா அல்லது சுதந்தர மக்களாக வாழ்வதா என்பதை முடிவுசெய்ய எனது பதவி விலகல் தமிழ் மக்களுக்கு உதவும்; இந்த இடத்திற்கு இடைத் தேர்தல் நடைபெறும்போது, இதுபற்றி முடிவுசெய்ய தமிழ்மக்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும்"

என்று அவர் அறிவித்துவிட்டு, தமது பதவி விலகல் கடிதத்தை அவையின் எழுத்தரிடம் தந்துவிட்டு, அவையிலிருந்து வெளியேறினார்.

புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தைத் தமிழ் மக்கள் ஏற்றார்களா என்ற பிரச்சினையில், தம்முடைய தொகுதியான கனகேசன் துறையில் தம்மை எதிர்த்தும் போட்டியிடுமாறு அரசுக்கு அறைகூவல் விடுத்தார்; 'அரசு தோற்ருல், புதிய அரசியல் அமைப்புச் சட்டம் தமிழர்களுக்கு இசைவானது எனக் கூறுவதை நிறுத்த வேண்டும்; நான் தோற்ருல் என் கொள்கைகளைக் கைவிடுவேன்' என்ருர் அவர்.

தமது தள்ளாமையையும் மீறி உணர்ச்சிப் பெருக்குடன் திரு. செல்வநாயகம் அவர்கள் ஆற்றிய உரையில் மேலும் கூறியதாவது:—

"தமிழர்களுக்கு உரிமை வழங்காத இலங்கை அரசியல் சட்டத்தை -- இலங்கையிலுள்ள சிறுபான்மையினரான தமிழர்களில் கணிசமான பகுதியினர் ஆதரிப்பதாக இலங்கை அரசு கூறுகிறது; நாங்கள் இதை மறுக்கிருேம்; அரசாங்கம் கூறுவதை மெய்ப்பிக்க அதற்கு ஒரு வாய்ப்புத்தர விரும்புகிருேம்.

இதற்குரிய நல்ல வழி, தலைவனான நானே எனது பதவியைவிட்டு விலகி -- என்னுடைய கொள்கையின் சார்பில் மீண்டும் என் தொகுதியில் போட்டியிடுகிறேன்; 'அரசாங்கமே --- அந்தக் கொள்கையை எதிர்த்து எனக்குப் போட்டியாக நின்று பார்' என்று கூறுவதுதான்! இதன்மீதான முடிவு தமிழ்மக்களுடையதாக இருக்கட்டும்!

சுதந்தர மக்களாக வாழவேண்டுமானல், எனக்கு வாக்களிக்குமாறு தமிழ் மக்களைக் கேட்டுக் கொள்கிறேன்; நான் தோற்றுப்போனல், என்னுடைய கொள்கையைக் கைவிட்டுவிடத் தயார்; அரசு தோற்றுவிட்டால், 'தமிழர்கள் இந்த அரசியல் அமைப்பை ஆதரிக்கிருர்கள்' என்று பேசுவதைத் தொடர்ந்து கூருமல் இருக்கட்டும்!"

தமிழக--கேரள ஆற்று நீர்ப் பங்கீடு

இரு மாநில அமைச்சர்கள் சந்திப்பு

திருவனந்தபுரம், அக். 4 –
தமிழக -- கேரள ஆற்று நீர்ப் பங்கீடு பற்றி நேற்று இங்கு இரு மாநில அதிகாரிகளின் பேச்சு வார்த்தை நடைபெற்றது.

சிறுவாணி ஆற்றிலிருந்து கோவை நகருக்குக் குடிநீர் வழங்குவது பற்றியும், பாண்டியாறு -- புன்னம்புழா ஆற்று நீரைப் பயன்படுத்தித் தமிழ்நாடு அரசு மின் உற்பத்திச் செய்வது பற்றியும் விவாதம் நடைபெற்றது.

நேற்று நடைபெற்ற பேச்சு வார்த்தை தொடர்பாக, இன்று இரு மாநிலப் பொதுப்பணித் துறை அமைச்சர்களும் கூடிப் பேசுகின்றனர்.

அமைச்சர் என். வி. என். மணிவிழா

மதுரை மேயர் முத்து தலைமையில் விழாக் குழு

சென்னை, அக். 4—
தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளரும் -- தொழிலாளர் நலத் துறை அமைச்சருமான திரு. என். வி. நடராசன் அவர்களின் 60-ம் ஆண்டு நிறைவு மணிவிழாவை, நவம்பர் திங்கள் 12-ம் நாளன்று சிறந்த முறையில் கொண்டாட, மதுரை மேயரும் தந்தையும் -- மதுரை மாவட்ட தி. மு. க. செயலாளருமான திரு. எஸ். முத்து அவர்கள் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

விழாக் குழுத் தலைவர்:—மதுரை எஸ். முத்து எம்.எல்.சி.

துணைத் தலைவர்:— திரு. இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ.

செயலாளர்கள்:— திரு. நீலநாராயணன் எம்.எல்.சி., திரு. முரசொலி மாறன் எம்.பி.

திராவிட முன்னேற்றக் கழக மாவட்டச் செயலாளர்கள் அனைவரும் குழு உறுப்பினர்களாகப் பணியாற்றுவதென முடிவெடுக்கப்பட்டது.

இந்தத் தகவலைக் குழுச் செயலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பாசனத்துக்கு கழிவு நீர்

குடிநீர் வடிகால் வாரியத் திட்டம்

வேலூர், அக். 4—
கழிவு நீரைப் பாசனத்துக்குப் பயன்படுத்துவது பற்றித் தமிழ்நாடு வடிகால் -- குடிநீர் வாரியம் புதிய திட்டம் ஒன்றை வகுத்திருக்கிறது.

இந்தத் திட்டத்தின்படி, கழிவு நீரைச் சேகரித்து, அது பாசனத்துக்குப் பயன்படும் வகையில் மாற்றப்படும்.

பண்பாட்டுடன் ஒட்டி நிற்கும் மரியாதை

முதல்வரின் பண்புக்கு இராஜாஜி பாராட்டு

சென்னை, அக். 4—
'சுதந்தரப் போராட்டத் தியாகி' என்ற முறையில், திரு. சி. இராசகோபாலாச்சாரியாருக்கு வழங்கப்பட்ட தாமிரப் பட்டயத்தை, முதலமைச்சர் கலைஞர் அவர்கள், நேற்று நேரில் வழங்கினர்.

"முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் நேரில் வந்து எனக்குத் தாமிரப் பட்டயத்தைத் தருவதாகத் தீர்மானித்தது, நம்முடைய நாட்டின் பண்பாட்டோடு ஒட்டி நின்ற மரியாதை முறை; இதனை நான் வெகுவாகப் பாராட்டுகிறேன்"

என்று செய்தியாளர்களிடம் இராசகோபாலாச்சாரியார் கூறினர்.

பின்னர், இராஜாஜியின் உடல் நலம் குறித்துக் கலைஞர் விசாரித்தார்; அதற்குப் பதிலளித்துவிட்டு ஆசி கூறினர்; 'என்னுடைய ஆசி வீண் போகாது என்ருர்.

உடனே கலைஞர் அவர்கள், 'உங்கள் ஆசி வீண் போகவில்லை; ஏற்கனவே நீங்கள் அளித்துள்ள ஆசியை உங்களாலேயே மாற்றமுடியாது' என்ருர்.

பின்னர், இராஜாஜியுடன் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டுக் கலைஞர் விடைபெற்ருர்; வாயில்வரை வந்து இராஜாஜி வழியனுப்பினர்.

அடிவருடிகள் கூடாரம்--

காந்தியின் பெயரைச் சொல்லி ஆட்சி நடத்துவது மானக்கேடு

அலகாபாத், அக். 4—
"காந்தியார் உயிர் துறந்து 25 ஆண்டுகள்தான் ஆகின்றன; ஆனல், அதற்குள்ளாகவே அவருடைய அறிவுரைகளை நாடு மறந்துவிட்டது.

இந்தியாவில் இன்று, 'அடிவருடிகள் -- கடத்தல்காரர்கள் -- கள்ள மார்க்கெட்டுக்காரர்கள்தான் நிறைந்திருக்கின்றனர்; இந்த நிலைமை ஏற்பட்டதற்கு காங்கிரசுக் கட்சியின் தலைமைதான் காரணம்; காந்தி செய்த நல்ல பணிகளையெல்லாம் அவர்கள் பாழாக்கிக் கொண்டிருக்கிருர்கள்!

இன்று நாட்டின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பவர்கள், இன்னமும் காந்தியை, 'நாட்டின் தந்தை' என்று சொல்லிக் கொண்டிருப்பது மானக்கேடாகும்!

காந்தி காட்டிய வழியைப் புறக்கணித்ததால்தான், நாடு இன்று ஒட்டாண்டியாகிவிட்டது; நேர்மை -- உண்மை -- நெறிகளெல்லாம் போய்விட்டன; அதற்குப் பதிலாக இன்று ஊழல்களே தலைதூக்கி நிற்கின்றன!

'வறுமையே--ஓடிப் போ' என்று ஒரு முழக்கம் எழுப்பப்படுகிறது; இதன் அர்த்தம் என்ன என்பதை இந்திய மக்கள் ஆழ்ந்து யோசித்துப் பார்க்காததால்தான் அந்த முழக்கத்துக்கு ஒரு மதிப்பு ஏற்பட்டிருக்கிறது; அந்த முழக்கத்திற்கு ஏதாவது அர்த்தம் இருக்கிறதா என்று மக்கள் பார்க்கவேயில்லை; கண்ணை மூடிக்கொண்டு தலைவர்கள் சொன்னபடி நடக்கிருர்கள்; இதன் பலனக இந்தியா இன்று அடிவருடிகளின் நாடாகிவிட்டது!"

--ஆச்சாரியா கிருபளானி
(கருத்தரங்கில்)

புதிய ரூபாய் நோட்டு

புதுடில்லி, அக. 4—
புதிய ஒரு ரூபாய் நோட்டுக்களை விரைவில் அரசு வெளியிடவிருக்கிறது.

இந்த நோட்டுக்களின் எண்களின் கடைசியில் 'E' என்ற எழுத்தும் பொறிக்கப்பட்டிருக்கும்; வேறு மாற்றங்கள் எதுவும் இருக்காது.

காந்தியாரின் வாரிசா இப்படிப் பேசுவது?

கழக அரசு மீது ஆத்திரம் பிறக்கக் காரணம் [illegible]ன்ன?

காமராசருக்கு முதல்வர் கலைஞர் விடுக்கும் வினு

சென்னை, அக். 4—

"'செந்தமிழைக் காப்பதற்குப் பத்தும் பேர் சாவோம் -- இந்தியை எதிர்க்கம் [illegible] பேர் சாவோம்' என்று சொல்லக்கூடிய மனவளம் இல்லாத காமராசர், 'தி. மு. கழகத்தைப் பதவியிலிருந்து இறக்குவதற்கு 100 பேர் சாவோம் வாருங்கள்' என்று அழைக்கிறார்!

நாங்கள் அமைச்சர்களாக இருப்பதற்காக 100 பேர் சாக வேண்டுமா -- காமராசர் 100 பேரைப் பலி கொடுக்க வேண்டுமா -- அப்படி என்ன குற்றத்தை நாங்கள் செய்துவிட்டோம்? காமராசர் ஏன் இவ்வளவு தீவிரமாகக் கழகத்தைக் குறைகூற ஆரம்பித்திருக்கிறார்? எங்கள் கொள்கையிலே என்ன குற்றத்தை அவர் கண்டார்? தேசியயக் கொள்கையிலே குற்றம் கண்டாரா? நிலச் சீர்திருத்தத்திலே குற்றம் கண்டாரா? '10 பஸ்களுக்கு மேல் வைத்துக்கொள்ளாதே' என்று சொன்னோமே -- அதிலே குற்றம் கண்டாரா? 50 பஸ்களின் உடைமையாளர்களையெல்லாம் அகற்றிவிட்டு அரசாங்கமே அந்தப் பஸ்களையெல்லாம் சொந்தமாக்கிக் கொண்டிருக்கிறதே -- அதிலே குற்றம் கண்டாரா? 'பி.யு.சி.-வரை இலவசக் கல்வி' என்று ஆக்கியிருக்கிறோமே -- அதிலே குற்றம் கண்டாரா?

இருபதாண்டுக்கால காங்கிரசு ஆட்சியிலே ஓர் இலட்சம் பேருக்கு நிலப் பட்டா -- மனைப் பட்டா தந்தார்கள்; ஐந்தாண்டுக்கால கழக ஆட்சியிலே -- அண்ணா உருவாக்கிய கழக ஆட்சியிலே -- ஐந்து இலட்சம் பேருக்கு மனைப் பட்டாவும் நிலப் பட்டாவும் தந்திருக்கிறோம் -- அதிலே குற்றம் கண்டாரா? எதிலே குற்றம் கண்டார் -- என்ன குற்றம் கண்டார்?

ஊர் ஊராகச் செல்கிறாரே -- உடல்நலத்தையும் பார்க்காமல் உலா வருகிறாரே -- பதைக்கப் பதைக்கப் பேசுகிறாரே -- 'உட்கார்ந்துகொண்டு பேசுவேன்; ஆனால் ஆட்சியில் இவர்களை உட்கார விடமாட்டேன்' என்கிறாரே -- என்ன குற்றம் செய்தோம்? ஏன் இவ்வளவு ஆத்திரம்?

எந்த ஆண்டும் இல்லாமல் திடீரென்று காந்தியினுடைய நினைவு காமராசருக்கு இந்த ஆண்டு வந்திருக்கிறது; போன [illegible] கூட காமராசர், காந்தி விழாவைக் கொண்டாடவில்லை; யாருடைய விழாவை அவர் கொண்டாடினார் என்பது அனைவருக்கும் தெரியும்.

'காந்தியினுடைய வாரிசு [illegible]' என்று பத்திரிகையிலே போடுகிறார்கள்; நேருவை மறந்தார்கள் -- நேதாஜியை மறந்துவிட்டார்கள்; ஆனால், 'காந்தியினுடைய வாரிசு காமராசர்' என்கிறார்கள் — நான் மறுக்கவில்லை; வாரிசாகவே இருக்கட்டும்; ஆனால், காந்தியார் இப்படித்தான் பேசினாரா?

அரசியல் நாகரிகத்தோடு ஒரு பெரிய இயக்கத்தை நடத்தியவர் காந்தியடிகள்; காந்தியடிகளின் வாயில் காமராசர் பேசும் இந்த மொழிகள் என்றாவது வந்ததுண்டா?

நாவலர் அவர்கள் கடற்கரைக் கூட்டத்திலே குறிப்பிட்டதைப்போல், காமராசர் எங்களையெல்லாம் 'மந்திரிகள்' என்று சொல்கிறார் -- 'ரௌடி'கள் என்றுதானே கூறிவருகிறார்!

நான் ரௌடி -- நாவலர் ரௌடி -- கழகத்திலே இருக்கின்ற நண்பர்களெல்லாம் ரௌடிகள்;

ஆனால், உலகத்திலே ஒரே ஒரு யோக்கியர் காமராசர்தான் போலும்! ஆகவேதான், அவருடைய கண்ணுக்கு யாரைப் பார்த்தாலும் ரௌடிகளாகத்தான் தெரிகிறது; கழகத்திலிருக்கின்ற அத்தனை பேர்களும் அவரது கண்களுக்குக் காலிகளாக -- கூலிகளாக -- ஊழல் பேர்வழிகளாக -- இலஞ்சலாவண்யக்காரர்களாகத் தெரிகிறது!

ஐந்தாண்டுகளிலே கழக ஆட்சியினுடைய சாதனைகள் — அதன் பயன்கள் ஆகியவற்றை மக்கள் உணர்ந்திருக்கிறார்கள்; நாங்கள் பட்டி தொட்டிகளுக்குச் செல்கிறோம்; கிராமம் புறங்களுக்கும் செல்கிறோம்; 'காமராசர் முன்னேற்றக் கழகத்தின் சக்தியை சிதைத்துவிட்டார் — அழித்துவிட்டார் அல்லது கரைத்துவிட்டார்' என்றால், அம்பத்தூரில் இத்தனை ஆயிரம் பேர் கூடுவீர்களா?

காமராசர் முதலமைச்சராக இருந்தபோது இவ்வளவு கூட்டம் கூடிற்றா — இல்லையே — ஏன்?

வெள்ளையனை எதிர்த்தபோது காங்கிரசுக் கட்சிக்கும் — காமராசருக்கும் கூட்டம் கூடிற்று; ஆனால், காமராசரும் — காங்கிரசுக் கட்சியும் ஆளும் கட்சியாக ஆன பிறகு மக்கள் அவர்களை மதிக்கவில்லை! மக்கள் கூடவில்லை!

சிறிய கூட்டம் என்றால், அதற்கு உதாரணமே சொல்வார்கள் — 'என்னம்பா, இது அமைச்சர்கள் பேசும் கூட்டம் போலிருக்கிறதே' என்று முன்பெல்லாம் சொல்வார்கள்; அந்த அளவிற்கு அவர்கள் ஆட்சிக் காலத்தில், ஆட்சியிலிருந்தவர்களை மக்கள் பாராட்டவில்லை—மதிக்கவில்லை.

ஆனால், இன்று கழகம் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த ஐந்தாண்டுக் காலத்திற்கும் பிறகும், பல்லாயிரக்கணக்கில் மக்கள் கூடுகிறார்களென்றால் என்ன பொருள்?

இவர்கள் என்னதான் விஷமப் பிரச்சாரம் செய்தாலும் — பொய்யுரைகளை மொழிந்தாலும் — மக்களிடத்தில் இந்த அரசுக்கு மாசு கற்பிக்க முயன்றாலும், மக்கள் நம்மை உணர்ந்திருக்கிறார்கள்!

மக்கள் அவர்கள் பேசுவதை, ஏதோ -- கச்சேரி கேட்பதுபோல், கேட்கிறார்கள்; கச்சேரியில் சங்கீத வித்துவான் தெலுங்குப் பாட்டும் பாடுவார் -- தமிழ்ப் பாட்டும் பாடுவார்; தெலுங்குப் பாட்டுக்குத் தலை அசைப்பார்கள் -- என்ன பாடினார் என்பது புரியாமலேயே! தமிழ்ப் பாட்டுக்குத் தலை அசைப்பார்கள்--என்ன பாடினார் என்பதைப் புரிந்துகொண்டு!

காமராசர் கூட்டத்தினர், தெலுங்குப் பாட்டும் பாடுகிறார்கள்; தலையை அசைக்காமல் இருந்தால், 'சங்கீதம் தெரியாதவன் என்று எண்ணிக்கொள்வார்களே' என்று எண்ணிக்கொண்டு சில பேர் தலையை அசைக்கிறார்கள்; தங்கள் பாட்டை ரசித்து அவர்கள் தலையை அசைப்பதாக அவர்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்!

நாங்கள், மக்களுக்கும் புரிந்த தமிழ்ப் பாட்டும் பாடிக் கொண்டிருக்கிறோம்; மக்கள் மொழியிலே பேசிக் கொண்டிருக்கிறோம்; மக்களுடைய உள்ளத்து மொழியை நாங்கள் புரிந்து கொண்டிருக்கிறோம்; அவர்களுடைய உள்ளத்தோடு பேசுகிறோம் -- உள்ளத்தைத் தொட்டு உறவாடுகிறோம்."

ஏழை எளியவர்களுக்குக் கிட்டாத சுதந்தரம்

கிட்டுமாறு செய்வதற்கே இந்த அரசு பாடுபடுகிறது

முதலமைச்சர் கலைஞர் விளக்கம்

சென்னை, செப். 30—

"சுதந்தரம் பெற்று 25 ஆண்டுக் காலமாகியும் அதன் பயனை நாம் அடையவில்லையே -- என்று ம. பொ. சி. அவர்கள் வேதனைப்பட்டார்; அது, அனைவரும் பகிர்ந்து கொள்ளக்கூடிய வேதனைதான்; தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், அதற்குள்ள அதிகாரம் -- சக்திக்குட்பட்டு உண்மையான சுதந்தரம் ஏழை எளியவருக்குக் கிடைக்க என்னென்ன செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்து வருகிறோம்; அதற்குத் தமிழரசுக் கழகம் -- முஸ்லிம் லீக் -- பார்வர்டு பிளாக் -- திராவிடர் கழகம் போன்ற வேறு பல முற்போக்கு எண்ணம் படைத்த கட்சிகளின் துணை இருந்துவருகின்றன; 'அவர்களது துணையோடு எங்கள் துணையையும் சேர்த்துக் கொள்ளுங்கள்' என்று பர்மா தமிழர்களும் இந்த விழாவினை எடுத்திருக்கின்றனர்; அந்த நம்பிக்கை நிச்சயம் வெற்றி பெறும்."

என்று, முதலமைச்சர் கலைஞர் அவர்கள், பர்மா பஜார் கடைக்காரர்களால் நடத்தப்பட்ட அண்ணா பிறந்த நாள் விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

பர்மா தமிழர் மறுமலர்ச்சி சங்கத்தின் சார்பில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா -- விடுதலை வெள்ளி விழா -- முதலமைச்சர் கலைஞருக்குப் பாராட்டு -- பர்மா அங்காடிகள் ஆண்டு விழா ஆகிய நாற்பெரும் விழாக்கள் சிறப்பான முறையில் நடைபெற்றன.

முதலமைச்சர் கலைஞர், பாரி முனையிலிருந்து பர்மா அங்காடி இறுதிவரை ஊர்வலமாக அலங்கார வண்டியில் அழைத்துச் செல்லப்பட்டார்.

விழாவுக்கு திரு. சிலார் மியான் எம்.சி. தலைமைத் தாங்கினார்.

முதல்வருக்கு வெள்ளி மகுடம் சூட்டப்பட்டது.

திரு. சிலார் மியான் சார்பில் வீர வாள் அளிக்கப்பட்டது. சங்கத்தின் சார்பில் முதல்வருக்கு வரவேற்பிதழ் வாசித்தளித்தனர்.

இலவசக் கண்ணொளி வழங்கும் திட்டத்திற்கு சங்கத்தின் சார்பில் ரூ. 501 அளிக்கப்பட்டது.

விழாவில் முகவை மாவட்டச் செயலாளர் எஸ். எஸ். தென்னரசு எம்.எல்.சி., திருப்பூர் மொய்தீன் எம்.எல்.ஏ., மாங்குடி மதியழகன், அமைச்சர்கள் அன்பில் தருமலிங்கம், எஸ். ஜே. சாதிக்பாட்சா, மேலவைத் துணைத் தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. ஆகியோர் பேசினர்.

இறுதியில் முதலமைச்சர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"ஏழை எளியவர்களுடைய கோரிக்கைகளைக் கழக அரசு நிறைவேற்றும்.

பர்மாவிலிருந்தும்—இலங்கையிலிருந்தும், ஆண்ட தமிழர்கள்-- அங்கே வாழ்ந்த தமிழர்கள், இன்று 'அகதிகள்' என்ற பட்டத்தோடு இந்த மண்ணுக்குள் விரட்டியடிக்கப்பட்டு வருகிறார்கள்.

'அவர்களுடைய வாழ்வு வளம் பெற இந்தியப் பேரரசு எந்த அளவுக்குப் பொறுப்பு ஏற்றாக வேண்டுமோ அந்த அளவுக்கு ஏற்றிருக்கிறதென்றாலும், அது போதுமானதல்ல; மத்திய அரசு இன்னும் தாராளமாக இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

பர்மாவிலிருந்தும்---இலங்கையிலிருந்தும்---வெளியேற்றப்படுபவர்களால் பெரிதும் பாதிக்கப்படுகின்ற மாநிலம் இந்தியாவில் தமிழ்நாடு மட்டுமேதான்; ஆகவே, அதற்குரிய உதவிகளைச் செய்வதற்கு மத்திய அரசு கடமைப்பட்டிருக்கிறது.

ஏனென்றால், பர்மாவிலிருந்து தமிழர்கள் வெளியேற்றப்படுகின்ற நேரத்தில் அதைத் தகிர்த்து நிறுத்தியிருக்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு உண்டு; நடந்தது நடந்துவிட்டது; இப்போது அவர்களைக் காப்பாற்ற--அவர்கள் வாழ்வில் வளம் ஏற்படுத்த மேலும் பல முயற்சிகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும்; மாநில அரசுக்கு உறுதுணையாக நிற்க வேண்டும்.

இலங்கையிலிருந்து வருகின்ற தமிழர்கள்--அவர்கள் இலங்கை இந்தியர்கள் என்று சொல்லப்பட்டாலும் -- அதில் பெரும்பாலானவர்கள் தமிழர்கள்தான்; அவர்களை வாழவைக்கத் தமிழக அரசு மேற்கொள்கின்ற முயற்சிகளுக்கு மத்திய அரசு மேலும் உறுதுணையாக இருக்கவேண்டும்.

இந்த விழாவில் மூன்று கோரிக்கைகளை வைத்திருக்கின்றனர்; முதல் கோரிக்கை—'இங்குள்ள கடைகள் இருக்கிற இடத்தை நிரந்தரமாக்க வேண்டும்' என்பது. இரண்டாவது கோரிக்கை —'அதற்குக் கடன் தர வேண்டும்' என்பது; மூன்றாவது கோரிக்கை — 'அந்தக் கடைகளுக்கு மின்வசதி செய்து தர வேண்டும்' என்பது.

பின்னால் இருக்கின்ற இரண்டு கோரிக்கைகளும் முதல் கோரிக்கையில் அடங்கிவிடுகிறது; இடத்தை நிரந்தரமாக்கிவிட்டால் அதிலே மற்ற இரண்டும் அடங்கிவிடுகிறது!

இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதானால், பல்வேறு பிரச்சினைகளை -- சிக்கல்களையெல்லாம் ஆராய வேண்டிய நிலை ஏற்படுகிறது.

எனவே, பர்மா தமிழர்களின் வாழ்வு எள்ளளவும் பாதிக்கப்படாமல் இருக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்; அதிகாரிகள் -- மாநகராட்சி மன்றம் -- போக்குவரத்துத் துறையினர் அனைவரையும் கலந்து கொண்டு எடுக்க வேண்டிய முடிவுகள் இனிதே எடுக்கப்படும்."

செய்திக்கு மறுப்பு

21—9—72 நாளிட்ட 'தினத்தந்தி'யில் 'அண்ணா பிறந்த நாள் விழா' என்ற தலைப்பில் ஓர் செய்தி வெளிவந்திருக்கிறது; நடைபெறாத நிகழ்ச்சியை நடந்ததாக யாரோ விஷமிகள் அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது; அந்த செய்தியில் கண்ட நிகழ்ச்சி பம்பாயில் நடைபெறவில்லை என்பதை தெரிவித்துக்கொள்வதோடு அந்த செய்திக்கும் கழகத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்" என்று பம்பாய் மத்தியக் கழகச் சார்பில் எல். என். செழியன் அறிவிக்கிறார்.

சென்னை மாவட்ட தி. மு. க.

பிரதிநிதிகள் கூட்ட முடிவுகள்

சென்னை, அக். 4—

சென்னை மாவட்ட தி. மு. கழகப் பிரதிநிதிகள் கூட்டம், அக். 1-ம் நாளன்று அவைத் தலைவர் செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது; மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் தீர்மானங்களை விளக்கிப் பேசினார்.

இரங்கல்

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:—

'இராவண காவியம்' நூல் எழுதிப் பகுத்தறிவு இயக்கத்துக்குப் பெரும் பணியாற்றிய புலவர் குழந்தை -- தொழிற் சங்கப் பணிகளின் காரணமாக ஏற்பட்ட காழ்ப்பின் காரணமாக மாற்றுக் கட்சியினரின் கொலை வெறிக்கு ஆளாகி உயிர்நீத்த தோழர் லிங்கம் ஆகியோரின் மறைவுக்கு இக்கூட்டம் பெரிதும் வருந்துவதுடன், மறைந்த தோழர்களின் குடும்பங்களுக்குத் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

ஒழுங்கு முறை

சென்னை மாவட்டத்தின் வட்டங்கள்தோறும் அமைந்துள்ள துணை--சார்பு மன்றங்களும், படிப்பகங்களும் மிகவாகப் பெருகிவிட்ட காரணத்தாலும் --- அவைகளுடைய பணிகள் அந்தந்த வட்டத்தின் கழக அமைப்புகளுக்கு உறுதுணையாக அமைகின்றனவா என்பதைக் கவனிப்பதற்கும் --- மாவட்டத்தின் எல்லா துணை--சார்பு மன்றங்களும் படிப்பகங்களும் புதிதாக அங்கீகாரம் பெற வேண்டுமென்பதற்கு ஆவன செய்யுமாறும் --- இதற்கேற்ற வகையில் சென்னை மாவட்டக் கழகம் குறிப்பிடும் நாளுக்குள் அந்தந்த வட்டத்தின் கிளைக்கழகச் செயலாளர்களிடம் அந்தந்த வட்டத்தில் அமைந்துள்ள கழகத் துணை--சார்பு மன்றங்களும் படிப்பகங்களும் உரிய விவரங்களைக் கொடுத்துப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்றும்-- குறிப்பிட்ட நாளுக்குள் பதிவு செய்துகொள்ளத் தவறும் துணை--சார்பு மன்றங்களும் படிப்பகங்களும் கழகத் தொடர்புடையவை அல்ல என்றும் அறிவித்து அத்தகு அமைப்புகளில் கழக உறுப்பினர் யாரும் பங்கேற்கக் கூடாது என்பதற்கும் --- அத்தகு அமைப்புகள் கழகக் கொடி மற்றும் கழகச் சின்னங்களைப் பயன்படுத்தக் கூடாது என்பதற்கும் மாவட்டக் கழகச் சார்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்குமாறும் --- அத்துடன், ஒரு வட்டத்தில் குறிப்பிட்ட பெயரால் அமைந்துள்ள அல்லது அமைகின்ற துணை--சார்பு மன்றமோ அல்லது படிப்பகமோ அந்தந்த வட்டக் கிளை அல்லது சட்டதிட்டப்படி அந்தந்த வட்டக் கிளையின் மூலமாக மேலமைப்புகள் ஆகியவைகளோடு மட்டுமே தொடர்பு கொள்ள வேண்டுமென்பதை வலியுறுத்தி நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கும் --- ஒரு வட்டத்தில் ஒரு பெயரில் அமைந்துள்ள அல்லது அமைகின்ற துணை--சார்பு மன்றமோ படிப்பகமோ அதே பெயரில் வேறு வட்டங்களில் அமையும் மன்றங்களுடனோ படிப்பகங்களுடனோ அமைப்பு ரீதியான எத்தகு தொடர்பும் வைத்துக்கொள்ளக்கூடாது என்பதை மாவட்டக் கழகச் சார்பாக வலியுறுத்தி நடைமுறைப்படுத்துவதற்கும் உரிய அனுமதி வழங்குமாறும் தலைமைக் கழகத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

நன்றியறிதல்

"அறிஞர் அண்ணா அவர்களின் 64-வது பிறந்த நாள் விழாவினையொட்டி 17-[illegible]2 அன்று ஊர்வலத்தையும், பொதுக்கூட்டத்தையும் வரலாறு காணாத வகையில் சிறப்பாக நடத்துவதற்குச் சென்னை மாவட்டக் கழகத்திற்குப் பேருதவி புரிந்து உறுதுணை நின்ற அன்பர்களுக்கும் நண்பர்களுக்கும்-- நிதி வழங்கிய பெருமக்களுக்கும் -- ஊர்வலத்தில் கலந்து கொண்ட தொழிலாளர் அமைப்புகள் -- மாணவர் அமைப்புகள் -- மகளிர் அமைப்புகள் ஆகியவற்றிற்கும், விழா நிகழ்ச்சிகளையும் சிறப்புகளையும் முறையாகவும் சிறப்பாகவும் வெளியிட்டு, உதவிய 'நம் நாடு', 'முரசொலி', 'தினத்தந்தி', 'மாலை முரசு', 'தென்னகம்' ஆகிய இதழ்களுக்கும், அண்ணா சிலை -- அண்ணா சதுக்கம் ஆகியவைகளில் கண்ணைக் கவர்ந்த வண்ண விளக்குகள் அமைத்துக் கொடுத்த தோழர்களுக்கும், விழா சிறப்பாக அமைவதற்காக ஒவ்வொரு செயலையும் ஆர்வத்தோடு அயராது ஆற்றிய பகுதி -- கிளை -- துணை -- சார்பு மன்றங்களின் நிர்வாகிகளுக்கும் தோழர்களுக்கும், அனைத்துக்கும் மேலாக விழாவை நாடு வியந்து பாராட்டும் அளவுக்கு உயர்த்திக் காட்டி அலை அலையாகத் திரண்டுவந்து ஊர்வலத்திலும் பொதுக்கூட்டத்திலும் கலந்து கொண்ட பொதுமக்களுக்கும் இக்கூட்டம் தனது நன்றியறிதலையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறது."

அடித்தளத்து மக்களைக் கரையேற்றும் இயக்கம்

கழகத் தலைவர் கலைஞர் விளக்கம்

சென்னை, அக். 4—

"திராவிட முன்னேற்றக் கழகம் எந்தச் சோதனையிலும் பட்டுப் போனது கிடையாது; நெருப்பில் தங்கத்தைப் போட்டால் அது உருகி அழிந்துவிடாது -- புடம்போட்ட பத்தரைமாற்றுத் தங்கமாகத்தான் வெளிவரும்; வைரக் கல்லை வெட்ட வெட்ட பட்டை தீட்டப்பட்ட வைரமாக மேலும் மின்னும்; அதைப்போல் நமது கழகத்திற்கு வரும் சோதனைகள் அனைத்தும். கழகத்தைப் புடம் போட்ட தங்கமாகவும் -- பட்டை தீட்டிய வைரமாகவும் ஆக்கவே பயன்படும்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், அம்பத்தூரில் நடந்த அண்ணா பிறந்த நாள் விழாவில் பேசுகையில் கூறினார்.

அம்பத்தூர் டி. ஐ. சி. தொழிலாளர் பகுத்தறிவு மன்றத்தின் சார்பில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா மிகச் சிறப்புறக் கொண்டாடப்பட்டது.

மன்றச் செயலாளர் கரு. சோமசுந்தரம் அனைவரையும் வரவேற்றார்.

மன்றத் தலைவர் எம். ஏ. ஆண்ட்ரூஸ் தலைமையேற்றார்.

விழாவில் தோழர்கள் அ. பெ. லோகநாதன், கு. வீராசாமி, பம்மல் நல்லதம்பி, வி. பி. அகிலன், இலட்சுமணன் எம்.பி., எம். கோபால் எம்.எம்.ஏ., ம. வெ. நாராயணசாமி எம்.எல்.ஏ., மாவட்டச் செயலாளர் கே. டி. எஸ். மணி ஆகியோர் பேசினர்.

அம்பத்தூரில் நீண்ட நாள் காங்கிரசுக்காரரான எம். என். செலபதி, கலைஞர் முன்னிலையில் கழகத்தில் சேர்ந்தார்.

தொழிலாளர்கள் சார்பில் ரூ. 50 இலவசக் கண் சிகிச்சை நிதிக்கென அளிக்கப்பட்டது.

மன்றத் துணைச் செயலாளர் கணபதி நன்றி கூறினார்.

மக்களின் முடிவுக்கு எதிராகச் செயல்பட இயலுமா?

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"கழக நண்பர்களே -- நம்மை நாமேகூட அழித்துக்கொள்ள இயலாத அளவிற்கு வளர்ந்து வலுப்பெற்றிருக்கிறோம்.

நம்மை நாமே அழித்துக்கொள்வதற்குக்கூட இந்த நாட்டுப் பொதுமக்கள் நம்மை அனுமதிப்பதற்குத் தயாராக இல்லை!

தி. மு. கழகத்தை நம்முடைய கையிலிருந்து தமிழ்ப் பெருங்குடி மக்கள், தங்கள் கையிலே எடுத்துவைத்துக் கொண்டிருக்கிறார்கள்!

என்ன காரணம் இதற்கு?-- அவர்களுக்கு வழிகாட்டக்கூடிய -- அவர்கள் இல்லத்தில் விளக்கேற்றிவைக்கக்கூடிய -- அவர்களுடைய வாழ்வை மேம்படுத்தக்கூடிய -- நன்மை தீமைகளை உணரக்கூடிய -- அடித்தளத்து வீழ்ச்சியிலிருந்து அவர்களைக் கரையேற்றக்கூடிய ஒரு பெரும் இயக்கம் தமிழகத்திலே முன்னேற்றக் கழகத்தைத் தவிர வேறு இல்லை; இந்தத் தீர்ப்பில் தமிழ்மக்கள் வந்துவிட்டதுதான் அதற்குக் காரணமாகும்.

'மாற்றுக் கட்சி நண்பர்கள் ஏசுகிறார்களே, பேசுகிறார்களே-- அவர்களும் கூட்டம் நடத்துகிறார்களே -- அதற்கும் பொது மக்கள் செல்கிறார்களே -- அதிலும் சில முக்கியமானவர்களுடைய கூட்டத்திற்கு ஆயிரக்கணக்கில்கூட மக்கள் செல்கிறார்களே -- தமிழ்ப் பெருங்குடி மக்களில் ஒரு பகுதியினர் அவர்கள் பக்கம் இருப்பதாகத் தெரிகிறதே -- ஆகவே கழகத்திற்கு ஆபத்து ஏற்பட்டுவிட்டதா' என்றெல்லாம் யாரும் சந்தேகப்படத் தேவையில்லை!

1971-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அவர்களுக்குக் கூடாத கூட்டமா?--அவர்கள் பேசாத பேச்சா? -- எழுதாத எழுத்தா?

கழக நண்பர்கள் அதனை உணர்ந்து, வேறு எதிலும் கவனம் செலுத்தாமல், மக்களின் நல்வாழ்வுக்கான ஆக்கப்பணிகளில் அக்கறை செலுத்துமாறும், உழைப்பை ஈடுபடுத்துமாறும் கேட்டுக்கொள்கிறேன்."

கல்வித்துறையில் புரட்சிகர மாறுதல்

அமைச்சர் நாவலர் வலியுறுத்தல்

வேலூர், செப். 29—

"கல்வித்துறையில் வெறும் சீர்திருத்தங்கள் செய்வதுமட்டும் போதாது; ஒரு புரட்சியே செய்தாகவேண்டும்" என்று கல்வியமைச்சர் நாவலர் இங்கு கருத்தறிவித்தார்.

காட்பாடியில் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிக்கென ரூ. 6 இலட்சம் செலவில் கட்டப்பட்ட கட்டடத்தை நாவலர் திறந்துவைத்துப் பேசுகையில் மேலும் கூறியதாவது:—

"இப்போதுள்ள பரீட்சை முறைகள், மாணவர்களின் நினைவு ஆற்றலை ஆண்டுக்கு ஒருமுறை சோதிக்கவே பயன்படுவனவாக உள்ளன; சில வகைக் கேள்விகளுக்கும் பதில் அளிக்கும் வகையில் மாண[illegible] தயாரிக்கப்படுகின்றனர்; இதற்கு ஆசிரியர்களும் துணையாக உள்ளனர்; இதனை விடுத்து, மாணவர்களின் சிந்தனையைத் தூண்டும் வகையில் கல்வி கற்பிக்கவேண்டும்."

இவ்விழாவுக்கு, திரு. துரை முருகன் எம்.எல்.ஏ. தலைமை வகித்தார்; கல்லூரிக் கல்வி இயக்குநர் திரு. டைட்டஸ் வரவேற்றார்.

இந்தியாவில் ஏற்றுமதி -- இறக்குமதி

புள்ளிவிவரத் தகவல்

புதுடில்லி, செப் 30—

சென்ற ஜூலை மாதத்தில் ஏற்றுமதி ரூ 141.37 கோடியை எட்டியது; நடப்பு நிதியாண்டில் ஜூலை முடிய ரூ. 502.01 கோடி பெறுமானமுள்ள பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

கடந்த ஆண்டு இதற்கு ஒப்பான காலத்திய ஏற்றுமதியைவிட இது ரூ. 73 கோடி அதிகமானதாகும்.

1972 ஏப்ரல் முதல் ஜூலை வரையிலான காலத்தில் இறக்குமதி கணிசமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது; இந்த நான்கு மாத காலத்தில் இறக்குமதியானப் பொருட்களின் மதிப்பு ரூ. 558.60 கோடியாகும்; இது, கடந்த ஆண்டு இதே கால வரையறையில் நடைபெற்ற இறக்குமதியின் மதிப்பைவிட ரூ. 60 கோடி குறைவானதாகும்.

ஏப்ரல் முதல் ஜூலை வரையிலான நான்கு மாத காலத்தில் சென்ற ஆண்டு ஏற்றுமதியைவிட இறக்குமதி ரூ. 102.42 கோடி அதிகமாக இருந்தது; நடப்பு ஆண்டில் இறக்குமதியைவிட ஏற்றுமதி ரூ. 33.41 கோடி உயர்வாக இருக்கிறது.

கூட்டுறவுத் துறை அமைச்சர்

சி. பா. ஆதித்தனார்

நிகழ்ச்சிகள்

அக். 5 காலை 9 மணி: தர்மபுரி மாவட்டக் கூட்டுறவு வங்கி கட்டட அடிக்கல் நாட்டு விழா; 10 மணி: கண் சிகிச்சை முகாம் தொடக்க விழா.

பேச்சாளர் முகவரி

நெல்லை காதர்,
நடுத் தெரு,
அயன்பொட்டல்புதூர்,
நெல்லை மாவட்டம்

தொழில் துறையில் தமிழ்நாடு முன்னணியில் நிற்க வலியுறுத்தல்

சென்னை, செப். 30—

"தொழில் அமைதியை நிலைநாட்டுவதில், இரண்டு அல்லது 3 ஆண்டுகளுக்குத் தொழிலாளர்கள் முழு ஒத்துழைப்பு அளித்தார்களானால், நம் நாட்டின் தொழில் துறையில் தமிழ்நாடே முன்னணியில் நிற்கும்"

என்று தொழிலாளர் நலத்துறை அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் கூறினார்.

தாம்பரத்தை அடுத்த பெருங்களத்தூரில் உள்ள ஸ்டாண்டர்டு மோட்டார் ஆலையில், 'ஸ்டாண்[illegible]' முதல் இதழை, அமைச்சர் வெளியிட்டார்; ஆலையின் ஊழியர் சங்கத் தலைவர் எஸ். தர்மலிங்கம் அதனைப் பெற்றுக் கொண்டார்.

இந்த ஆலையின் நிர்வாகத்தினருக்கும் -- ஊழியர்களுக்குப் இடையே நல்லுறவு நிலவுவது குறித்து அமைச்சர் மகிழ்ச்சி தெரிவித்தார்; 'தொழில் தகராறில், வேலைநிறுத்தம் என்பது கடைசி ஆயுதமாக இருக்கவேண்டும்' என்று அவர் வற்புறுத்தினார்.

ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனத்தின் இயக்குநர் கே. வி. சீனிவாசன் வரவேற்புரையாற்றினார்.

சங்கச் செயலாளர் கே. ஆர். இராமசாமி நன்றி கூறினார்.

தமிழ்நாடு அரசு

தொழில் மற்றும் வணிகத் துறை

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

தமிழ்நாடு ஆளுநர் சார்பில், தொழில் மற்றும் வணிகத் துறை கட்டுமானப் பிரிவு மேற்பார்வைப் பொறியாளர், தொழில் வணிகத் துறையின் கட்டுமானப் பிரிவு மற்றும் ஏனைய துறைகளினால் தரப்படுத்தப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்க்காணும் வேலைகளுக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் பிற்பகல் 3 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளிகள், சென்னை-17, தியாகராயநகர், 2, விஜயராகவாச்சாரி சாலையில் உள்ள தொழில் வணிகத்துறை மேற்பார்வைப் பொறியாளர், கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப் புள்ளி பெறுவதற்குக் கடைசி நாளாள பிற்பகல் 3-10 மணிக்கு -- நேரில் இருக்க விரும்பும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறந்து பார்க்கப்படும்.

வரிசை எண்	வேலையின் பெயர்	பொறுப்புத் தொகை	ஒப்பந்த நிபந்தனை அறிக்கைகளின் விலை	முடிக்க வேண்டிய காலஅளவு	ஒப்பந்த நிபந்தனை அறிக்கைகள் கிடைக்கும் தேதி	ஒப்பந்தப் புள்ளி பெறுவதற்கான கடைசி தேதி
1.	ஒப்பந்த எண் 1 அடையாற்றிலுள்ள இன்ஸ்டிரானிகல் சுற்றுவளைவுக்குள் II டைப் பணிமனைகள் 2 கட்டுதல்	ரூ. 2,200	ரூ. 10.40	6 மாதங்கள்	12-10-72	31-10-72
2.	ஒப்பந்த எண் 2 அடையாற்றிலுள்ள இன்ஸ்டிரானிகல் சுற்றுவளைவுக்குள் II டைப் பணிமனைகள் 2 கட்டுதல்	ரூ. 2,200	ரூ. 10.40	6 மாதங்கள்	12-10-72	31-10-72
3.	ஒப்பந்த எண் 3 அடையாற்றிலுள்ள இன்ஸ்டிரானிகல் சுற்றுவளைவுக்குள் II டைப் பணிமனைகள் 2 கட்டுதல்	ரூ. 2,200	ரூ. 10.40	6 மாதங்கள்	12-10-72	31-10-72
4.	ஒப்பந்த எண் 4 அடையாற்றிலுள்ள இன்ஸ்டிரானிகல் சுற்றுவளைவுக்குள் II டைப் பணிமனைகள் 2 கட்டுதல்	ரூ. 2,200	ரூ. 10.40	6 மாதங்கள்	13-10-72	31-10-72
5.	ஒப்பந்த எண் 5 அடையாற்றிலுள்ள இன்ஸ்டிரானிகல் சுற்றுவளைவுக்குள் II டைப் பணிமனைகள் 2 கட்டுதல்	ரூ. 2,200	ரூ. 10.40	6 மாதங்கள்	13-10-72	31-10-72

(1) ஒப்பந்த வடிவம்: முழுத் தொகை

(2) ஒப்பந்த விவர அறிக்கைகள், சென்னை 32 ல் உள்ள கிண்டி தொழில்பேட்டை, வடக்குக் கோட்ட நிர்வாகப் பொறியர் (கட்டுமானம்) அலுவலகத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் -- அலுவலக நேரங்களில் விலைக்குக் கிடைக்கும்.

(3) ஒப்பந்த விவர அறிக்கைகளின் விலை விற்பனை வரி உட்பட ரூ. 10.40 (எந்தச் சூழ்நிலையிலும் திருப்பிப் பெற முடியாதது) 'XXIX -- தொழில்கள்' என்ற தலைப்பின்கீழ் அரசுக் கருவூலத்திலோ, இந்திய ரிசர்வ் பாங்கியிலோ செலுத்தப்பட வேண்டும். மற்ற இரசீதுகள், 'நிர்வாகப் பொறியர் (கட்டுமானம்), வடக்குக் கோட்டம், தொழில்பேட்டை, கிண்டி, சென்னை—32' என்ற பெயரில் இருக்க வேண்டும்.

(4) பொறுப்புறுதித் தொகை, செலான்கள் -- கட்டுத்தொகை இரசீது மற்றும் ஷெட்யூல்டு பாங்கிகளின் டிராப்டுகள் ஆகியவை வாயிலாகத்தான் பெற்றுக்கொள்ளப்படும். கிண்டி தொழில்பேட்டை, வடக்குக் கோட்ட நிர்வாகப் பொறியர் (C) பெயரில் ஷெட்யூல்டு பாங்கி டிமாண்ட் டிராப்டுகள் பெறப்பட்டிருக்க வேண்டும். மாநில அரசின் கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின் வாரியக் கடன் பத்திரங்களும் மார்க்கெட் மதிப்புக்கு 5 சதவிகிதம் குறைந்த மதிப்பில்தான் பெற்றுக்கொள்ளப்படும். தேசிய சேமிப்பு சர்ட்டிபிகேட்டுகள்கூட தொடர்புடைய அஞ்சல் நிலையத்தின் ஒப்புதலோடு பெற்றுக்கொள்ளப்படும். அரசுடைமையான எந்தப் பாங்கியின் உறுதிப்பாடும் ஏற்றுக்கொள்ளப்படும். இவையன்றி, வேறு எந்த வகையிலும் பணம் பெற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(5) ஒப்பந்ததாரர்கள், பெரிய கட்டிட வேலைகளில் குறைந்தது மூன்றாண்டுக்காலமாவது அனுபவம் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

சென்னை—17

சி. பி. மாத்யூ,
மேற்பார்வைப் பொறியாளர்,
கட்டுமானப் பிரிவு.

தமிழ்நாட்டில் பருவமழை தவறியதன் விளைவு

விவசாயத் தொழிலாளருக்கு மாற்று வேலை அளிக்கத் தீவிரத் திட்டம்

நெருக்கடி ஏற்படாமல் தடுக்க முன்னெச்சரிக்கை ஏற்பாடு

சென்னை, அக். 3–

தமிழ்நாட்டில் பருவமழை தவறியதால் வருவாய் இழப்புக்கு ஆளாகி உள்ள விவசாயிகளுக்கு ஈடு செய்வதற்காகவும்--வறட்சி நிலை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு நிவாரணமாக மாற்று வேலை அளிப்பதற்காகவும் ஒருங்கிணைந்த தீவிரத் திட்டம் ஒன்றைத் தமிழக அரசு உருவாக்கி வருகுறது; அதேநேரத்தில் பருவமழை தவறிய காரணத்தால் மாநிலத்தில் பற்றுக்குறை அல்லது நெருக்கடி ஏற்படாமல் தவிர்ப்பதற்குத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அனைத்தையும் மாநில அரசு எடுத்து வருகிறது.

வறட்சி நிவாரணப் பணிகளுக்காகத் தமிழக அரசு மத்திய அரசிடம் கோரும் ரூ. 6 கோடி நிதியுதவி, மாநிலத்திலுள்ள கண்கூடான நிலையை உணர்ந்து கேட்கப்படுவதாகும்; வேறு சில மாநிலங்களைப்போல் நிலைமையை மிகைப்படுத்தியோ அல்லது மக்களிடையே ஒருவகை பீதி உணர்ச்சியை ஏற்படுத்தியோ கேட்கப்படவில்லை.

காலம் தவறி பெய்திருக்கும் மழையினால் நிலைமையில் ஒன்றும் மாற்றம் ஏற்பட்டுவிடவில்லை; பருவமழை தவறியதால் விவசாயிகளும்--விவசாயத் தொழிலாளர்களும் பெரும் அளவுக்கும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

அக்டோபர்--நவம்பரில் பெய்ய வேண்டிய மழையாவது தவறாமல் பெய்யும் எதிர்பார்த்துத்தான் மத்திய அரசிடம் ரூ. 6 கோடி நிதியுதவி கோரப்பட்டது; இந்த மழையும் தவறிவிட்டால் நிலைமை மோசமாகும் என்று அஞ்சப்படுகிறது.

இத்தகவலைத் தெரிவித்த அதிகாரி ஒருவர், இத்தொடர்பில் மேலும் கூறியதாவது:—

"மேட்டூர் நீர்த் தேக்கத்தில் நீர் மட்ட அளவு குறைந்திருக்கிறது; தஞ்சை மாவட்டத்தில் சம்பாப் பயிருக்கு ஏற்பட்டுள்ள ஆபத்து -- வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் மணிலாப் பயிருக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு ஆகியவை கணிசமாக இருந்தபோதிலும், தமிழக அரசு இவற்றை ஒரு பீதி உணர்ச்சியுடன் அணுகவில்லை; இருப்பினும், தொடர்ந்து பருவ மழை தவறினால் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை உரிய நேரத்தில் மேற்கொள்ளவும் -- விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் ஆகியவர்களுக்கு பாதிப்பு ஏற்படாமலிருக்கவும் ஒருங்கிணைந்த திட்டங்களை உருவாக்கி வருகிறது.

காலங்கடந்து பெய்யும் பருவ மழை கண்டிப்பாக விவசாயிகளுக்கு மகசூல் பாதிப்பையும், விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புப் பாதிப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது; இதைச் சரிக்கட்டவே தனிச் சாகுபடி உற்பத்தித் திட்டங்களை அரசு செயல்படுத்த வேண்டியிருக்கிறது.

இப்போதைய நிலவரத்தை வைத்துக் கொண்டே தமிழக வறட்சி நிவாரணப் பணிகளுக்கு ரூ. 6 கோடி கேட்டுள்ளோம்; டிசம்பருக்குப் பிறகும் இதே நிலை நீடிக்குமானால், மேலும் மத்திய உதவி கோர வேண்டிய அவசியம் ஏற்படும்; அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்படாது என்று நம்புவோமாக!

சில இனங்களுக்கு மானியம் -- வேறு சில இனங்களுக்குக் கடன் என்ற ரீதியானதோர் ஏற்பாட்டின் அடிப்படையிலேயே மத்திய உதவி கோரப்படுகிறது.

மாநில அரசு ரூ. 50 இலட்சம் வரை செலவிட்டு அதற்கு மேலும் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டால், மத்திய உதவி கிடைப்பதற்குமுன், மத்திய அரசின் நிபுணர் குழு ஒன்று மாநிலத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு நிலைமைகளை ஆராயும்; அவர்கள் கண்டு அறிந்த நிலைமையின் அடிப்படையில் மத்திய நிதியுதவி கொடுக்கப்படும்.

எல்லா மாநிலங்களிலும் வறட்சி நிலை இருப்பதை உணர்ந்துள்ள மத்திய அரசு தமிழகத்திற்கும் உதவும் என்று நம்புகிறேன்.

நீண்ட காலமாகத் தொடர்ந்து வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள இராமநாதபுரம்--தர்மபுரி மாவட்டங்களில் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் ரூ. 2 கோடி வீதம் மத்திய உதவியுடன் தனித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இது தவிர, தர்மபுரி மாவட்டத்தின் பின்தங்கிய நிலை -- வறட்சி நிலை ஆகியவைகளை கருத்தில் கொண்டு மேலும் ரூ. 4 கோடிக்கான சிறப்புத் திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது; மத்திய அரசின் ஆலோசனையுடன் இந்தச் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட இருக்கிறது. இத்திட்டத்தின்கீழ் இரு நடுத்தரப் பாசனத் திட்டங்கள் -- இரு சிறு பாசனத் திட்டங்கள் -- மண் வளப் பாதுகாப்புத் திட்டம் போன்றவை செயல்படுத்தப்படும்."

வறட்சிக்கு நிதியுதவி

தலைமையமைச்சரிடம் தமிழக அமைச்சர்கள் கோரிக்கை

புதுடில்லி, செப். 30—

தமிழ்நாடு உணவு அமைச்சர் மன்னை ப. நாராயணசாமி -- வருவாய்த் துறை அமைச்சர் ப. உ. சண்முகம் ஆகியோர் தலைமை அமைச்சர் இந்திரா காந்தியைச் சந்தித்து, தமிழ்நாட்டில் வறட்சி நிவாரணப் பணிக்காக ரூ. 6 கோடி நிதியுதவி தருமாறு கோரினர்.

தமிழகத்தில் பருவமழை தவறியதால் தோன்றியுள்ள நிலவரத்தைத் தலைமையமைச்சரிடம், அவர்கள் விளக்கிக் கூறினர்.

நீண்ட காலப் பயிர் சாகுபடித் திட்டம்

தமிழகத்திற்கு நிதியுதவ மத்திய அரசு முன்வரும்?

சென்னை, செப். 30—

சம்பா போன்ற நீண்ட காலப் பயிர் சாகுபடி திட்டத்திற்குத் தமிழகத்திற்குக் கணிசமான அளவில் நிதியுதவ மத்திய அரசு

நம் நாடு

மைசூர் மாநிலத்தில் மின்சார வெட்டு

அக். 1 முதல் 25 சதவிகிதம் செயல்படுத்தப்படுகிறது

பெங்களூர், செப். 30—

மைசூர் அரசு விடுத்துள்ள 25 சதவிகித மின்சார வெட்டு, மாநிலம் முழுவதிலும் அக்டோபர் 1-ம் நாள் முதல் நடைமுறைக்கு வருகிறது.

ஒரு லைசென்சுதாரர், அக். 1-ம் நாளுக்கு முன்னதாகத் தொடர்ந்து 6 மாத காலம் பயன்படுத்திய மின்சார அளவில் 25 சதவிகிதம் வெட்டு செயல்படுத்தப்படுகிறது.

தொழிற்சாலைகள் வீடுகளில் மின்சாரம் பயன்படுத்துவோர் உட்பட அனைவருக்கும் மின்சார வெட்டுப் பொருந்துகிறது.

கொள்ளிடத்திலிருந்து குடிநீர் வழங்கு திட்டம்

தஞ்சாவூர், செப். 30—

தஞ்சை நகருக்கு 9 மைல் தொலைவில் உள்ள கொள்ளிடத்திலிருந்து குடிநீர் வழங்குவதற்கான திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கிறது; 1974-ம் ஆண்டில் இந்தத் திட்டம் முடிவடையக்கூடும்.

இந்தத் திட்டத்துக்கு ரூ. 1.19 கோடி செலவாகும்.

"இந்தத் திட்டத்தின் கீழ் விளாங்குடி அருகே கொள்ளிடத்திலிருந்து தண்ணீர் எடுக்கப்படும்; அன்றாடம் ஒவ்வொருவருக்கும் 25 காலன் தண்ணீர் கிடைக்கும்; குடிநீர் வழங்கும் முறை முற்றிலும் மாற்றியமைக்கப்படும்; நகரில் 6 இடங்களில் உயர்மட்ட நீர்த் தொட்டிகள் அமைக்கப்பட்டு தண்ணீர் வழங்கப்படும்" என்று தஞ்சை நகராட்சி எஞ்சினியர் கே. சக்கரபாணி தெரிவித்தார்.

முன்வந்திருப்பதாகத் தெரிய வருகிறது.

அண்மையில் இதன் தொடர்பாக மத்திய அரசு நிபுணர்கள் குழு ஒன்று சென்னைக்கு வருகைதந்து தமிழக அரசு அதிகாரிகளுடன் தீவிர சாகுபடித் திட்டத்திற்குத் தேவைப்படும் நிதயுதவி பற்றி விவாதித்து விவரம் அறிந்து கொண்டனர்; இதன் அடிப்படையில், தமிழகத்திற்கு கணிசமான அளவுக்கு நிதியுதவி கிடைக்கும் என்பது இப்போது உறுதியாகி இருக்கிறது.

வறட்சியால் பாதிக்கப்படாத பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

திண்டிவனம் --- செஞ்சி தாலுகாக்களில் வரி வசூல்-கடன் பாக்கி தள்ளிவைப்பு

கலெக்டர் தகவல்

கடலூர், செப். 30—

"தென்னார்க்காடு மாவட்டத்தில் திண்டிவனம், செஞ்சி தாலுகாக்கள் முழுவதிலும் வரி பாக்கி -- கடன் பாக்கி வசூலைத் தள்ளிப் போடுமாறு அரசு உத்தரவிட்டிருக்கிறது; வறட்சி நிவாரண உதவியின் ஒரு பகுதியாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது"

என்று மாவட்டக் கலெக்டர் சண்முக சிகாமணி, செய்தியாளரிடம் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"திருக்கோவிலூர் தாலுகாவில் எலவனாசூர் -- உளுந்தூர்பேட்டை -- முகையூர் -- திருநாவலூர் -- மணலூர்பேட்டை திருக்கோவிலூர் -- திருவெண்ணெய் நல்லூர் பிர்க்காக்களிலும், விழுப்புரம் தாலுகாவில் கணக்கஞ்சனூர் -- விக்கிரவாண்டி பிர்க்காக்களிலும் வரி பாக்கி வசூலும் -- கடன் பாக்கி வசூலும் ஒத்திவைக்கும்படி அரசு உத்தரவிட்டிருக்கிறது."

சலவைத் தொழிலாளர்களுக்கு இலவசக் கருவிகள்

கலப்புத் திருமணம் செய்து கொண்ட 21 இணைகட்குத் தங்கப் பதக்கம்

அமைச்சர்கள் சத்தியவாணிமுத்து--ஓ. பி. இராமன் வழங்கினர்

சென்னை, அக். 4—

சென்னையில் கலப்புத் திருமணம் செய்துகொண்ட 21 இணைகளுக்குத் தங்கப் பதக்கம் வழங்கும் விழா, நேற்று முன்னாள் நடைபெற்றது.

சென்னையை அடுத்த பட்டாளத்தில் நடந்த இந்த விழாவில் அரிசன நலத்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் கலந்துகொண்டு தங்கப் பதக்கங்களை வழங்கினார்.

இலவசக் கருவிகள் வழங்கல்

இதே விழாவில், 28 சலவைத் தொழிலாளர்கட்கு, அமைச்சர் ஓ. பி. இராமன், இலவச இஸ்திரிப் பெட்டிகள் -- மேஜைகள் முதலியவற்றை வழங்கினார்.

விழாவுக்கு, அரிசன நல இயக்குநர் கோமேதகவேலு தலைமை தாங்கினார்.

ஜார்ஜ் கோமகன் எம்.எல்.சி., வை. பாலசுந்தரம் எம்.எல்.ஏ., பி. சிவசங்கரன் ஆகியோர் பேசினர்.

திரு. ஏ. பாலன் நன்றி கூறினார்.

தோல் பதனிடும் தொழிலாளர்கட்கு அகவிலைப் படி

வேலூர், அக். 4—

வட ஆற்காடு மாவட்டத் தோல் பதனிடும் தொழிற்சாலை உரிமையாளர்கள், தங்கள் தொழிலாளர்கட்கு வாழ்க்கைச் செலவுப் புள்ளி ஒன்றுக்கு 25 காசு வீதம் அகவிலைப் படி அளிக்க ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

மத்திய அரசால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் இந்த அகவிலைப் படி விகிதம், ஏப்ரல் முதல் நாளிலிருந்து செயல்படுத்தப்படும்; அக்டோபர் 31-ம் நாளுக்கு முன்னதாக அகவிலைப் படி பாக்கித் தொகை தரப்படும்.

தோல் பதனிடும் தொழிற்சாலை உரிமையாளர் பிரதிநிதிகளும் -- தொழிலாளர் பிரதிநிதிகளும் சந்தித்துப் பேசியதைத் தொடர்ந்து இந்த உடன்பாடு ஏற்பட்டது.

தொழிலாளர்களின் மற்ற கோரிக்கைகள் பற்றி விரைவில் பரிசீலிக்கவும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்த உடன்படிக்கையில் 10,000 தொழிலாளர்கள் பயனடைவர்.

பட்டாக் குறிப்பேடு வழங்கும் திட்டம்

பரமக்குடியில் முதலமைச்சர் கலைஞர் துவக்கிவைக்கிறார்

சென்னை, அக். 4—

தமிழ்நாட்டில் நிலப் பட்டாதாரர்கள் அனைவருக்கும் 'பட்டாக் குறிப்பேடு' வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் கலைஞர் அவர்கள், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பரமக்குடியில் இம்மாதம் 9-ந் தேதியன்று துவக்கி வைப்பார்.

தமிழ்நாட்டில் மொத்தம் 70 இலட்சம் பட்டாதாரர்கள் உள்ளனர்; துவக்கத்தில் 60,000 பட்டாதாரர்களுக்கு 'பட்டா குறிப்பேடு'கள் வழங்கப்படும்; நிலத்தின் பரப்பளவு பற்றிய விவரங்கள் இந்தக் குறிப்பேட்டில் குறிக்கப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் [illegible] அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

5--10--72

தர்மபுரி

நாவலர் மன்றச் சார்பில் மாலை 7மணிக்கு அண்ணா மணி மண்டபம் அருகில்; தலைவர்; எஸ். ஏ. மாடசா; பேசுவோர்: ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.பி., எம். வி. கரிவேங்கடம் எம்.எல்.ஏ., கே. பெரியசாமி, டி. பி. இராசாமணி, பெ. பெரும்பாக்கன், டி. எஸ். சண்முகம், த. வே. வடிவேலன், து. சென்னியப்பன், எம். கோவிந்தராசன், மு. கந்தசாமி, புலவர் காசி.

தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

என். வி. நடராசன்

நிகழ்ச்சிகள்

அக். 5 காலை முற்பகல் 11 மணி; சீர்காழி ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; மாலை 4 மணி; கொள்ளிடம் நீர்த்தேக்க தொட்டி திறப்பு; 6 மணி: சீர்காழி கூட்டுறவு நகர வங்கி பொன்விழா கட்டடம் திறப்பு; இரவு 7 மணி: சீர்காழி பொதுமக்கள் வரவேற்பு.

அறநிலைய அமைச்சர்

மு. கண்ணப்பன்

நிகழ்ச்சிகள்

அக். 5 பேரறிஞர் அண்ணா அவர்களின் 64-ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவையொட்டி ஏழைகட்குக் கோவை நகரின் கீழ்க்கண்ட இடங்களில் உணவு அளித்தல் (திரு. மு. இராமநாதன், எல்.எல்.சி. அவர்களின் ஏற்பாடு):—

நண்பகல் 12 மணி: வைசியால் வீதி, பேச்சிமுத்து ரங்கசாமி கவுண்டர் திருமண மண்டபம்; 12-30 மணி: நஞ்சப்பராவ் திருமண மண்டபம், பெரிய கடைவீதி; பிற்பகல் 1 மணி: நாடார் திருமண மண்டபம், திருச்சி சாலை; 1-30 மணி: பாப்பநாயக்கன் பாளையம்— ஜின்னிங் பேக்டரி; இரவு 7-30 மணி: கோவைகோட்டை 19-வது வார்டு பொதுக்கூட்டம்.

சமுதாய வளர்ச்சித் திட்ட வார விழா

கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் சமுதாய வளர்ச்சித் திட்ட வார விழாவைபொட்டி 8–10–72 காலை 8 மணிக்கு சிறப்புக்கூட்டம் நடைபெறும்; தலைவர் க. சுப்பராயன்; பேசுவோர்: ஆ. பரந்தாமன் எம்.எல்.ஏ., என். ஆர். சீனிவாசராவ், டாக்டர் இராதாகிருஷ்ணன், எஸ். சீனிவாசன், டாக்டர் உதயசங்கர், டாக்டர் ரமணி, திருமதி வி. ஜானகி.

தஞ்சை மாவட்ட சலவைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கக் கூட்டம்

தஞ்சை மாவட்ட சலவைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க நிர்வாகிகள் கூட்டம், 6—10—72 காலை 10 மணிக்கு மன்னார்குடி வ. உ. சி. சாலை வாசுகி இல்லத்தில், திரு. சி. ஆ. கோலப்பா எம்.எல்.சி. -- திரு. வி. பி. தனுக்கோடி ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்; கிளைச் சங்கத் தலைவர்களும், செயலாளர்களும் கலந்து கொள்ளும்படி மாவட்ட அமைப்பாளர் நாகை வி. எம். வேலு கேட்டுக் கொள்கிறார்.